ரோயல் கல்லூரி – கொழும்பு 07
Royal College - Colombo 07

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 7

நேரம் : 2 மணி
Time: 2 hour

Name: - ..... *class: -*..... *Index no: -* .....

பகுதி 1

பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.

1. சுயநலத்திற்கும் ஒரு வரம்பு இருக்கின்றது இங்கு **வரம்பு** என்னும் சொல் குறிப்பிடுவது

1.சந்தோஷம் 2.எல்லை 3.கடமை 4.விடயம்

1. **சுயநலம்** பேணுவது தலையாய கடமையாகும். இங்கு **சுயநலம்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1.தன்னலம் 2.பொதுநலம் 3.நலம் 4. குடும்ப நலம்

3. பாங்கி என்பதன் எதிர்பாற்சொல்

1.பாங்கு 2. பாங்கின் 3. பாங்கன் 4. பாங்கினன்

4. **எண்கு** என்பதன் கருத்தாவது

1. யானை 2. புலி 3.கரடி 4. குரங்கு

5. விலங்குகளின் ஆரவாரம் காட்டையே **நடுநடுங்கச்** செய்யும் . இங்கு **நடுநடுங்க** என்பது

1.இரட்டைக்கிளவி 2. இணைமொழி
3. அடுக்குத்தொடர் 4. அடுக்கிடுக்குத் தொடர்

6. உடல் உயிர் உள்ளம் இந்த மூன்றுமே முழு உரிமையான செல்வங்களாகும் என்ற வாக்கியத்தில் இடப்பட வேண்டிய நிறுத்தற்குறிகள் முறையே

1.காற்புள்ளி , முற்றுப்புள்ளி 2.காற்புள்ளி அரைப்புள்ளி
3.முற்றுப்புள்ளி அரைப்புள்ளி 4.முற்றுப்புள்ளி காற்புள்ளி

7. கழுத்து, ஆபத்து, துண்டு, பூமியின் பெரும் பிரிவு என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்.

1. துன்பம் 2. கடல் 3. மண் 4. கண்டம்

8. பலாவின் பிஞ்சு முசு என்பது போல வாழையின் பிஞ்சு

1. பழம் 2. வடு 3.கச்சல் 4.காய்

9. முள் + செடி என்பதை சேர்த்தெழுதினால்

1. முள்ளுச்செடி 2. முச்செடி 3. முட்செடி 4. முள்செடி

www.ikedu.lk

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

10. ஒலியின் வரி வடிவம் என அழைக்கப்படுவது

1. சொல் 2. வாக்கியம் 3. பந்தி 4. எழுத்து

11. **மூக்கறுபடல்** என்னும் மரபுத்தொடரின் கருத்தாவது

1.அவமானப்படல் 2.ஏமாற்றமடைதல் 3.துன்பமடைதல் 4.கேலி செய்தல்

12. யாம் ஐவேம் என்னும் பாடலை மொழிப்பெயர்த்தவர்

1. தேசிக விநாயகம்பிள்ளை 2.சோமசுந்தரப்புலவர்

3. அழகசுந்தர தேசிகர் 4.உமர் கய்யாம்

13. முதன் முதலாக ரெமிங்டன் தட்டச்சு எத்தனையாம் ஆண்டில் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டது?

1. 1877 2. 1975 3. 1875 4. 1977

14. காந்தியடிகளுக்கு 'மகாத்மா' என்னும் பட்டத்தை வழங்கியவர்

1. ஹகீம்ஜீ 2. இரவீந்திரநாத் தாகூர்

3. நேரு 4. இராஜகோபாலாச்சாரியார்

15. **தீங்கிழைத்தவர்** என்னும் சொல்லைப் பிரித்தெழுதினால்

1. தீங்கு + இழைத்தவர் 2. தீங்கி + ழைத்தவர்

3. தீங் + கிழைத்தவர் 4. தீங்கி + இழைத்தவர்

16. **பெரிய** மரம் விசாலமாக வளர்ந்திருந்தது

1. எழுவாய் அடைமொழி 2.எழுவாய் 3.செயற்படுபொருள் 4.பயனிலை அடைமொழி

17. **தளையாய கடைமை** என்னும் சொல்லை வழு நீக்கி எழுதினால்

1.தலையாய கடைமை 2.தழையாய கடமை

3.தலையாய கடமை 4.தழையாய கடைமை

18. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி

1.ஸ, ஷ, ங 2. ஜ, ஞ, ஸ்ரீ 3. ஸ, ஜ, ஸ்ரீ 4. ஷ, ஜ, ஞ்

19. கல்வி நமக்கு பல நன்மைகளைத் .....

1.தருகின்றது 2.தரும் 3.தந்தன 4.தருகின்றன

20. அ.்றிணை ஒன்றன்பால் நிகழ்காலச் சொல்

1. வந்தது 2. வருகின்றது 3. வருகின்றான் 4. வருகின்றன

(40 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி 2

முதலாம் வினா கட்டாயமானது.ஏனைய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பை தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

1. நான் விரும்பும் பெரியார்
2. கல்வியின் முக்கியத்துவம்.
3. காட்டு விலங்குகளைப் பாதுகாப்போம்
4. பாழடைந்த கிணற்றின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

02.பின்வரும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

சுத்தமே என்றும் சுகமளிக்கும் - தீய
சோம்பலை ஒட்டித் துரத்தும் , அம்மா,
இத்தரை வாழ்வைப் பெருக்கும் அம்மா! அதற்கு
ஈடேதும் இல்லையாம் சொன்னேன், அம்மா!
கந்தையானாலும் கசக்கியுடு – என்னும்
கற்பனை போற்றி நடப்பாய் , அம்மா
சுந்தர மேனியுண்டாகும் ,அம்மா! இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ அம்மா

1. இப்பாடல் எதனைப் பற்றி உணர்த்துகின்றது?

   .....

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது?

   .....

3. சுந்தர மேனியுண்டாகும் என்பதன் கருத்து யாது?

   .....

4. சோம்பல் என்பதன் எதிர்ப்பதம் யாது?

   .....

5. சுத்தத்தைப் பற்றி நீர் அறிந்த வேறு பழமொழியொன்றைக் குறிப்பிடுக.

   .....

(10 புள்ளிகள்)

www.ikeou.lk

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆரம்பத்தில் தட்டச்சு எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?
2. காந்தியடிகள் முன்னெடுத்த அறவழிப்போராட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?
3. அல்லும் பகலும் அலைந்து ஆறு யாரைக் காண வந்தது?
4. பின்வரும் சொற்களுக்குரிய கருத்தை எழுதுக.
   1. பொழில் 2. அழல் 3. கணை 4. புங்கவர்
5. காந்தியடிகள் பிறந்த தினத்தையும் அவருக்குப் பெற்றோர் இட்ட பெயரையும் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04.பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.

1. பணி : .....
2. நிரை: .....
3. வாழ்: .....
4. கனை : .....
5. குறை : .....

(10 புள்ளிகள்)

05. டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
(75 சொற்கள்)

(10 புள்ளிகள்)

06. சுருக்கமான விடை எழுதுக.

1. தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களை வகைப்படுத்திக் காட்டுக.
2. இலங்கையிலுள்ள ஆறுகள் அனைத்தும் மிக ஆழமானவை. இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைத் தெரிந்து எழுதுக.
3. உறவுமுறைக் கடிதத்தின் உறுப்புக்களைக் குறிப்பிடுக.
4. அடைமொழிகளுக்கு இரு உதாரணங்கள் தருக.
5. திணை எத்தனை வகைப்படும்? அவை எவை?

(10 புள்ளிகள்)

www.ikedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில் இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu